ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2241/7 - 2021 අගෝස්තු මස 16 වැනි සඳුදා - 2021.08.16

*2241/7 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் முறையே 44(1), 45(1) மற்றும் 47(1)(அ)(ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2020, ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டு, 2021, ஓகத்து மாதம் 16 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2021, ஓகத்து 16.*

1A - G 34538 — 380 (2021/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(1) அவ்வறிவித்தலில் "சனாதிபதி அலுவலகம் - தேசிய முன்னுரிமைகள்" என்ற தலைப்பின் கீழுள்ள "04. தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு:-

**04. தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| **நிறுவனங்கள் /சபைகள்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்** |
|---|---|
| 1. இலங்கை முதலீட்டுச் சபை<br>2. கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு<br>3. முப்படை உறுப்பினர்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காக அனைத்து படைகளினாலும் எடுக்கப்பட வேண்டிய செயன்முறைகளை கற்றாராய்ந்து சொல்லப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்குவதற்கான சனாதிபதி செயலணி<br>4. பாதுகாப்பான நாடு, ஒழுக்கப் பண்புமிக்க, குணநெறிமிக்க சட்டத்தை மதிக்கும் சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணி<br>5. கொவிட்-19 அமைச்சுக்களின் செயலணி<br>6. கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமையை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணி<br>7. இலங்கை கல்வி நடவடிக்கைகள் தொடர்பான சனாதிபதி செயலணி<br>8. பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான சனாதிபதி செயலணி<br>9. காலநிலை மாற்றங்களுக்காக நிலையான தீர்வுகளுடன் கூடிய பசுமையான இலங்கையை உருவாக்கும் சனாதிபதி செயலணி<br>10. தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள், சுயதொழில்கள் மற்றும் பரம்பரைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சிறு பொருளாதார வழ்வாதாரத் தேவைகளுக்காக புவிசார் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் மற்றும் வழிமுறைமைகளைப் பரிசீலனை செய்வதற்கான சனாதிபதி செயலணி<br>11. கொவிட்-19 தேசிய தடுப்பூசியேற்றல் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான சனாதிபதி செயலணி | • (1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் (முதலீட்டுச்சபைச் சட்டம்)<br>• (2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் |

(2) அவ்வறிவித்தலில் இல. "6.0 நிதி அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள "04. தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு:-

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| **1. பொதுத் திறைசேரி நடவடிக்கைகள்**<br><br>i. பொதுத் திறைசேரி<br>ii. அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம்<br>iii. தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்<br>iv. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்<br>v. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்<br>vi. அரச நிதி திணைக்களம்<br>vii. திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம்<br>viii. அரச நிதி கணக்குகள் திணைக்களம்<br>ix. வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்<br>x. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்<br>xi. நீதி அலுவல்கள் திணைக்களம்<br>xii. முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்<br>xiii. அபிவிருத்தி நிதித் திணைக்களம்<br><br>**2. அரச வருமானம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள்**<br><br>i. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்<br>ii. இலங்கைச் சுங்கம்<br>iii. மதுவரித் திணைக்களம்<br>iv. தேசிய லொத்தர் சபை<br>v. அபிவிருத்தி லொத்தர் சபை<br>vi. ஏற்றுமதி இறக்குமதித் திணைக்களம்<br><br>**3. வங்கி நிதிகள் மற்றும் மூலதனச் சந்தைக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை அலுவல்கள்**<br><br>i. இலங்கை மத்திய வங்கி<br>ii. சகல அரச வங்கிகள், நிதி, காப்புறுதி மற்றும் அவற்றின் நிருவாகத்துக்குட்பட்ட கம்பனிகள் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள்<br>iii. இலங்கைக் காப்புறுதி ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு<br>iv. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் இதன் நிருவாகக் கம்பனிகளும் இணைக்கம்பனிகளும்<br>v. கடன் தகவல் பணியகம்<br>vi. கம்பனி பதிவாளர் திணைக்களம்<br>vii. இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு<br>viii. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் | • ஒதுக்கீட்டுச் சட்டங்கள்<br>• (1956 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சுங்கக் கட்டளைச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) வெளிநாட்டுக் கடன் சட்டம்<br>• (2007ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) பற்றுக்கள் மீதான வரிச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரிச்சட்டம்<br>• (2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) கெசினோ வியாபாரச் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க)பொருளாதார சேவை அறவீட்டுச் சட்டம்<br>• 52 ஆம் அத்தியாயமான மதுவரிக் கட்டளைச் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க) நிதிக் குத்தகைச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டம்<br>• (2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க) நிதி முகாமை (பொறுப்புடைமை) சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) உள்நாட்டு அரசிறைச் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) காப்புறுதித் தொழில்துறை ஒழுங்கு படுத்துதல் சட்டம்<br>• (!951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) லோகோர் சீமாட்டி நிதியச் சட்டம்<br>• (1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்<br>• (2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) வியாபாரப் பெயர்ச் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) கம்பனிச் சட்டம்<br>• (1964 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வர்த்தக அடையாளச் சட்டம்<br>• (1935 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க) சீட்டுக் கட்டளைச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க) பொது ஒப்பந்தங்கள் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டம்<br>• (1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) முத்திரை தீர்வைச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) பெறுமதிசேர் வரிச் சட்டம் |

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| **4. நிதிய முகாமைத்துவம்**<br><br>i. லோகோர் சீமாட்டி நிதியம்<br>ii. வேலை நிறுத்தங்கள், கலவரம், சிவில் பிரச்சினை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம்<br>iii. தேசியக் காப்புறுதி பொறுப்பு நிதியம்<br>iv. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்<br>v. சிரம வாசனா நிதியம்<br>vi. தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்<br>vii. சிறுநீரக நிதியம்<br>viii. தேயிலை சக்தி நிதியம்<br>ix. கப்புருக நிதியம்<br>x. அரச சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்<br>xi. வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்<br>xii. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்<br>xiii. இலங்கை புத்தாக்குநர் பற்றிய நிதியம்<br>xiv. துருசவிய நிதியம்<br><br>**5. ஒழித்துக்கட்டுவதற்கு அல்லது வேறு நிறுவனங்களுடன் இணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்**<br><br>i. தொலைத்தொடர்புகள் திணைக்களம்<br>ii. வனசீவராசிகள் நிதியம்<br>iii. இலங்கை வெகுசன ஊடகப் பயிற்சி நிறுவனம்<br>iv. உள்ளக வர்த்தகத் திணைக்களம்<br>v. தானியப் பயிர்ச்செய்கை மற்றும் தானியங்கள் ஆராய்ச்சி உற்பத்தி அதிகாரசபை<br>vi. மட்டுப்படுத்தப்பட்ட ஜனத்தா பேர்ட்டிலைசர் என்டர்பிரைசஸ்<br>vii. சிறுவர்களைப் பாதுகாப்போம் தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | • *(1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) நிதிச் சட்டம்*<br>• *(2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டம்*<br>• *(2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சபைச் சட்டம்*<br>• *(1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர் சட்டம்*<br>• *(1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி சட்டம்*<br>• *(1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) நிதிசார் நீதிச் சட்டம்*<br>• *(1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்*<br>• *(1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) மக்கள் வங்கிச் சட்டம்*<br>• *(1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம்*<br>• *(1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வங்கிச் சட்டம்*<br>• *(1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) வங்கிகளினால் அளிக்கப்படும் கடன்களை அறவிடும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்*<br>• *(1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கையின் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சட்டம்*<br>• *(2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசியக் காப்புறுதி பொறுப்பு நிதியச் சட்டம்*<br>• *(1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*<br>• *(1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்*<br>• *உற்பத்தி வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*<br>• *(1937 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) பதிவுசெய்யப்பட்ட பங்குமூல பிணையப்பத்திரங்கள் கட்டளைச்சட்டம்*<br>• *(2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கொடுப்பனவு மற்றும் நடுத்தீர்ப்பு முறைமைச் சட்டம்*<br>• *(2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க) நிதி வியாபார நிதியச் சட்டம்*<br>• *(2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்*<br>• *(1961 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம்*<br>• *(1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம்*<br>• *(2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) தேயிலை சக்தி நிதியச் சட்டம்*<br>• *(2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கப்ருக நிதியச் சட்டம்*<br>• *(1916 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியச் சட்டம்*<br>• *(2000 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) துருசவிய நிதியம்*<br>• *(1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம்*<br>• *(1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) கட்புலனற்றோர் புனரமைப்பு நிதியச்சட்டம்* |

(3) அவ்வறிவித்தலில் இல. "6.1 நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி சீர்திருத்த இராஜாங்க அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள "03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு:-

**03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. அரச தொழில் முயற்சித் திணைக்களம்<br>2. தேசிய நடவடிக்கை அறை<br>3. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்<br>4. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி<br>5. கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு பயன்பாட்டு சொத்துக்கள் உயிர்ப்பித்தல்(அகற்றுதல்) சட்டத்தின்கீழ் திறைசேரிச் செயலாளர் வசமாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் | • இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம் (1975 இல. 13)<br>• கொடுப்பனவு முறைகள் மோசடிகள் சட்டம் (2006 இல. 30)<br>• வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் (1997 இல. 07)<br>• கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு பயன்பாட்டு சொத்துக்களை உயிர்ப்பித்தல்(அகற்றுதல்) சட்டம் (2019 இல. 12) |

(4) அவ்வறிவித்தலில் "31.0 பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்" எனும் தலைப்பின் பின்னர் பின்வரும் புதிய தலைப்பையும் அதன் கீழுள்ள "01. விடய எல்லை, 02. கடமைகளும் பணிகளும், 03. அதிவிசேட முன்னுரிமைகள் மற்றும் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" என்பவற்றைச் சேர்ப்பதன் மூலம்;

**32.0 அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர்**

**01. விடய எல்லை**

சுபீட்சத்தின் நோக்கு தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினுள் புதிய வாய்ப்புகளை உருவாக்கி, முனைப்பான அத்துடன் நேரடி பொறிமுறையின் ஊடாக மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களின் கட்டளைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் கருத்திட்டங்களை கண்காணித்தலும்.

**02. கடமைகளும் பணிகளும்**

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாகவும் அரசினால் செயற்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கைகளின்படியும் "அபிவிருத்தி அடைந்த நாடொன்றை" உருவாக்குவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளுக்கமைய அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு எனும் விடயத்திற்கு உரிய கொள்கைகளை ஆக்குதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களை செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அதற்குரிய கொள்கைகள், நியதிச்சட்டங்கள் கருத்திட்டங்களை ஆக்குதலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்.

**03. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தின்போது மக்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் சனாதிபதி அவர்களால் வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் கட்டளைகளை விரைவாகச் செயற்படுத்துவதற்காக மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய சகல நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளடங்கலாக, பிரதேச மட்டத்திலான சகல உத்தியோகத்தர்களையும் வழிநடாத்துதல்.

2. சகல கிராமங்களும் உள்ளடங்கும்வகையில் நியமிக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு), கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர் (கமநல சேவைகள் திணைக்களம்), சமுர்த்தி அபிவிருத்தி ஒழுங்குறுத்துநர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் (சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்), குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் (சுகாதாரத் திணைக்களம்), சிறுவர் பாதுகாப்புக் கிராமியக் குழு ஆகியோரை வதிவிட மட்டத்திலான கருத்திட்டங்கள், தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக பயனடையக் கூடிய வகையில் ஈடுபடுத்தல்.

3. பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் 2021-2023 வரவுசெலவுத்திட்டச் சட்டகத்தினுள் அரச நிறுவனங்களின் மூலம் செயற்படுத்தப்படும் வீதிகள், குடிநீர்வழங்கல், மின்சாரம், தொலைபேசித் தொடர்பாடல், விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், தொழில்கல்வி நிறுவனங்கள், நகர பல்கலைக்கழகங்கள், காணி ஒப்படைப்புகள், வங்கிகள் மற்றும் நிதி வசதிகள், வியாபாரத் தலங்கள், களஞ்சிய மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற கருத்திட்டங்களை துரிதப்படுத்தல்.

4. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்கள் மூலம் செயற்படுத்தப்படும் கடவத்தை - மீரிகம, பொத்துஹர - கட்டுகஸ்தோட்டை, குருநாகல் - தம்புள்ளை, கஹதுடுவ - இங்கிரிய - ருவன்புர, துறைமுக நுழைவு வீதி மற்றும் அத்துருகிரிய அதிவேக வீதி, மொரட்டுவை வரையான கரையோர அதிவேக வீதி (marine drive), சூரிய வெப்ப மின்நிலையங்கள் (சியம்பலாண்டுவ), சூரிய மற்றும் நீர்மின்சார இரட்டை மின்நிலையங்கள் (பூநகரி), நீர்மின்சார நிலையக் கருத்திட்டங்கள் (மொரகொல்ல, புரொட்லனட்) கும்புக்கன் ஓயா, மினிப்பே பெரிய கால்வாய், உமா ஓயா இறுதிக்கட்டம், வடமத்திய பெரிய கால்வாய், தல்பிட்டிகல, கிங் நில்வளா, மாதுறு ஓயா தெற்குக் கரை, வத்தேகெதர குளம், முந்தெனிஆறு நீர்த்தேக்கம், வடமேற்கு பெரிய கால்வாய், கீழ் மல்வத்து ஓயா, அத்தனகல்ல நீர்த்தேக்கம், பஸ்னாகொட நீர்த்தேக்கம், அத்தனகல்ல - மினுவாங்கொடை, குருநாகல், கண்டி, அநுராதபுரம் வடக்கு, களுகங்கை நீர்வழங்கல் திட்டம் மற்றும் பொலன்னறுவை மற்றும் கீழ் ஊவா நீர்ப்பாசனக் கருத்திட்டம், கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் உள்ள நடுத்தர வருவாய் வீடுகள் 50,000 கருத்திட்டங்கள், காலி, குருநாகல், திகண, நுவரெலியா, தம்புள்ளை தொழில்நுட்ப பூங்கா கருத்திட்டங்கள் உள்ளிட்ட கருத்திட்டங்களை இலக்கிடப்பட்ட காலஎல்லைக்குள் தரவளவோடு செயற்படுத்துதலை துரிதப்படுத்தல்.

5. சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் கொண்ட வதிவிடக் காணிகளில் வீடமைப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு பணிகள், அந்நிலங்களில் மரக்கறி, பழவகைகள், தென்னை, பலா, ஈரப்பலா போன்ற பயிர்வகைகளைப் பயிரிடுவதன்மூலம் வதிவிடப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல்.

6. பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதியின் கண்காணிப்பு பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் |
|---|
| 1. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.